# கலாவிநோதன் எம்.பி. அண்ணாசாமி ஆசிரியர்

## ஆழத்து முத்துக்கள் 62

கலைத்துறையில் இசைநாடக வளர்ச்சியின் பங்களிப்பானது ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இதில் வடமராட்சியின் இசைநாடகக் கலைஞர்களும் தமது பாரிய பங்களிப்பை வழங்கிப் புகழ் பெற்றுள்ளார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் அண்ணாவிமார் வாழ்ந்திருக்கின்றார்கள். அண்ணாவிமாரினால் ''கூத்து'' மட்டுமல்ல, இவர்களே காவடியாட்டம், கரகாட்டம், மத்தளம், ஆர்மோனியம், உடுக்கு, காவடிப் பாட்டுக்கள், பிற்பாட்டு, போன்றவற்றையும் தாமே ஆடிப்பாடி அத்தோடு மற்றவர்களுக்கும் பழக்கி இக்கலைகளைப் பாதுகாத்து வந்தார்கள். இந்த கலைப்பாரம்பரியமே எதிர்காலத்தில் நாடகப் பாரம்பரியமாக வளர்வதற்கு வித்திட்டதெனலாம். இத்தகைய போக்கே இன்று இக்கலைகளுக்குப் பல்கலைக் கழகங்கள்வரை முன்னுரிமை வழங்கியிருப்பதனையும் காணலாம்.

வடமராட்சியில் இசைநாடகத் துறைக்கு பெரும் பங்களிப்புச் செய்த அமரர் கலாவிநோதன் எம்.பி.அண்ணாசாமி ஆசிரியரை மறக்க முடியாது. நடிகன், ஒப்பனைக் கலைஞன், ஓவியன், சிற்பி, பக்கவாத்தியகாரன், பாடகன் (ரேடியோ சிலோன் பாடகன்) என்று பல்கலைகளையும் நன்கு கற்றவர். எல்லாவற்றையும் விட சிறந்த புவியியல், சித்திர ஆசிரியன். சிறந்த கரம்பந்தாட்டவீரன். உதைபந்தாட்ட வீரன். பாடசாலையில் சிறந்த நாடகப் பயிற்றுனர். நெறியாளுனர். சிறந்த சமூகசேவையாளன் என்ற பன்முகத்திறமை கொண்டவரே இவராவர். இவரை எல்லோரும் அன்பாக மாஸ்ரர் என்றே அழைப்பர். அவர்கள் இறந்து 32 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும் அவரது கலைச்சேவை யாழ்பாண நாடகப் பாரம்பரியத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். கரவை கிருஷ்ணாழ்வார், நடிகமணி வி.வி.வைரமுத்து ஆகியோர் பற்றிய நூல்கள் வெளிவந்துள்ளபோதும் இடையிடையே சில குறிப்புக்களைத் தவிர இவர் பற்றிய நூலெதுவும் வெளிவராதது ஒரு பகுதி நாடகச் சரித்திரம் வெளிக் கொண்டு வரப்படவில்லையென்றே கூறப்படவேண்டும்.

வதிரிக் கிராமத்தில் 1912 ஆண்டு அண்ணாசாமி அவர்கள் பிறந்தார். இவரது தந்தையார் பெரியபொடி அண்ணாவியாராகும். பேரியபொடி அவர்கள் தவில், மிருதங்கம், நாதஸ்வரம், தபேலா, ஆர்மோனியம், வாய்ப்பாட்டு ஆகியவற்றில் தேற்சிபெற்று இவைகளைத் தனது தொழில் ரீதியாகவும் செய்து வந்தார். இவர் தனது மகனுக்கு அக்காலத்து பிரபல நாதஸ்வர வித்வான் அண்ணாசாமி அவர்களின் பெயரினைச் சூட்டியதிலிருந்து

**- சி. ரவீந்திரன் -**

அவரின் கலையீடுபாடு எங்ஙனம் இருந்தது என்பதனை அறியமுடியும். பெயருக்கேற்றாற் போல் அவர் கலையில் வல்லுனராகத் திகழ்ந்தார். தந்தையாரிடம் இசைப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். பாடசாலையிலும் கோயிலிலும் பண்ணோடு தேவாரம் பாடுவதில் சிறந்தவராக விளங்கினார். தந்தை பெரியபொடி அண்ணாவியாரை ஆரம்ப குருவாக கொண்ட அண்ணாசாமி கல்வியிலும் விளையாட்டிலும்கூட சிறந்து விளங்கினார். கரவெட்டி, தேவரையாழி சைவ வித்தியாசாலையில் கற்கும் நாளிலேயே தானொரு ஆசிரியனாக வரவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார். (சூரன் சுயசரிதை நூல்) பாடசாலையில் கற்கும் காலத்தில் திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் பாடசாலைக்கு வருகை தந்திருந்தார். அப்போது மாணவனாகவிருந்த அண்ணாசாமி பண்ணிசையோடு தேவாரம் பாடியதைக் கண்ட திரு.வி.க அவர்கள் ஞானசம்பந்தர் என்று பாராட்டுத் தெரிவித்து ஆசீர்வாதம் வழங்கினார். தந்தையாரிடம் சங்கீத அறிவைப் பெற்றிருந்த இவர் மறைந்த சங்கீத வித்வான் பரம் தில்லைராஜா அவர்களின் தந்தையார் சிதம்பரம் அவர்கள் ஒழுங்குபடுத்திய இந்திய இசைமேதைகளிடமும் சங்கீதம் கற்றுக் கொண்டார்.

அண்ணாசாமி அவர்கள் பாடசாலைப் பருவத்திலிருந்தே பாடசாலை நாடகங்களில் நடித்துப் பயிற்சி பெற்றதனால் புராண, இதிகாச நாடகங்களிலும் நடிக்கலானார். அக்காலத்தே நாடகம் கூடுதலாகப் பாட்டுச் சார்ந்தே நடைபெறும். இவரது இசைப் பயிற்சி இதற்கு உதவியதென்றால் மிகையில்லை. இவர் அக்காலத்தே தியாகரஜபாகவதர், கிட்டப்பா போன்றோர் படங்களில் மிகவும் உச்சஸ்தாயில் பாடுவதனால், கவரப்பெற்று இவரும் 4 - 5 கட்டைகளில் மிகுந்த உச்சஸ்தாயில் பாடிவரலானார். இது அக்காலத்தையமைக் இல்லாத காலத்துக் கூத்துக்களுக்கு அவருக்கு உதவின. இவர் அக்காலத்தே இலங்கையின் பலபாகங்களிலே தனது நடிப்புத்திறனைக் காட்டியவராவர். இவர் ஸ்ரீவள்ளி, மகாகவி காளிதாஸ், சத்தியவான் சாவித்திரி,



அரிச்சந்திரா மயானகாண்டம், பக்த நந்தனார், பவளக்கொடி ஆகிய நாடகங்களை மேடையேற்றினார். பக்த்த நந்தனாரில் இவர் வேதியராகவும் வி.வி.வைரமுத்து புலையனாகவும் வேடமேற்று நடிக்கும்போது மிகவும் விறுவிறுப்பாகவிருக்கும். இருவரும் பாடுவதும் வசனம் பேசி மாறிமாறி நடிப்பதும் சபையோரைப் பிரமிக்கவைப்பதுடன் கைதட்டும் பெற்றுக் கொள்ளும். சத்தியவான் சாவித்திரியில் இருவரும் முன் பின் சத்தியவானாக நடித்ததையும் நான் பார்த்து ரசித்துள்ளேன். இதில் இன்னொரு சிறப்பு என்னவெனில் ஒருவர் காட்சியில் வந்து நடிக்கும் போது மற்றவர் ஆர்மோனியம் வாசிப்பார். இவ்வாறாக இருவரும் ஆர்மோனியம் வாசிப்பதிலும் விற்பன்னர்களாக விளங்கியிருந்தார்கள். முக்கியமாக இருவரும் மேடையில் நடிக்கும் போது ஒத்திக்கை பார்ப்பதில்லை. அவ்வாறாக இருவரும் ஈடுபாட்டோடு நடிப்பதனால் அவர்களுக்கு ஒத்திகை தேவையாயிருக்கவில்லை. அந்தளவிற்று வசனங்கள் இருவருக்கும் அத்துப்படியாகவேயிருந்தது. வசனங்களோ அல்லது பாடல்களோ தங்கு தடையின்றி வந்து கொண்டேயிருக்கும். இருவரும் நடிக்கும்போது கண்களும் கதைபேசும். ஆரம்பத்தில் வைரமுத்து பெண் வேடமேற்றுத்தான் நடித்து வந்தார். அண்ணாச்சாமி மாஸ்ரர்தான் வைரமுத்து அவர்களை கதாநாயகனாக வேடமேற்று நடிக்கும்படி அறிவுரை கூறினார் என்று வாழ்வும் அரங்கும் என்னும் நூலில் கலாநிதி. காரை.செ.சுந்தரம்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்.

ஸ்ரீவள்ளி நாடகத்தில் முருகன் பாத்திரத்தில் காட்சியளிக்கும் வேடன், கிழவன் பாத்திரங்கள் ரசிகர்களின் பாராட்டினைப் பெற்றன. ஒரு முறை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் ஸ்ரீவள்ளி நாடகம் இடம்பெற்றபோது, வள்ளியைக் கவருவதற்கு முருகன் தாத்தா வேடமேற்று வரும் காட்சியில் ''ஏச்சுப் போட்டேனே தாத்தா ஏச்சுப்போட்டேனே'' என்று தாத்தாவாக நடித்த அண்ணாச்சாமி பாடவும் ''ஏச்சுப்போட்டியே தாத்தா ஏச்சுப்போட்டியே'' என்று வள்ளியாக நடித்த அரியாலையூர் கவிஞர் ஐயாத்துரை அவர்களும் மாறிமாறி பாடியபோது சபையே மகிழ்ந்து கைதட்டியதனை நேரே பார்க்கும் வாய்புக் கிடைத்தது.

மாஸ்ரரின் நடிப்புலகத் தோழர்களானான நடிகமணி வி.வி.வைரமுத்து, சத்தியகீர்த்தியாக நற்குணம், யமனாக மார்க்கண்டு, நாரதராக தம்பியையா, கவிஞர் ஐயாத்துரை, இரணியனாக திரவியம், சந்திரமதி & வள்ளியாக இரத்தினம், கம்பராக இராசா, பெண்வேடத்தில் நடிக்கும் மாசிலாமணி, விதூஷகர்களான சி.ப என்ற இராசரத்தினம், மங்கலப்பாதி – சின்னத்துரை (இவர் கனடா ஸ்ரீமுருகன் அவர்களின் தந்தை) ஆகியோராவர்.

அண்ணாமி அரங்கத்தில் காட்சி, சீன்ஸ், சோடனைகள் யாவும் அண்ணாசாமி அவர்களாலேயே அமைக்கப்படும். இவர் ஒரு சிறந்த சித்திரக் கலைஞராகவும் சிறந்த சித்திர ஆசிரியராகவும் இருந்ததனால் இவை சாத்தியமாயிற்று. இவர் நடிக்காது விட்டாலும் இவரது நாடக சீன்ஸ் செற்றுக்களை வாடகைக்குப் பெற்று நாடகம் நடத்துவோரும் இருந்தனர். இவர் 'உமா சித்திராலயம்' என்ற பெயரில் ஒரு கலைக்கூடத்தினை அமைத்து நடத்தியும் வந்தார். அதில் பலருக்குப் பயிற்சியும் கொடுத்து வந்தார். அத்தோடு சிறந்த ஒப்பனைக் கலைஞராகவும் திகழ்ந்தார். ஒப்பனைப் பொருட்களும் வேறுவேறு சரித்திர நாடகங்களுக்கான உடை வகைகளும் அவரின் நாடகக் குழுவில் கைவசம் இருந்தது என்பது அவரது சிறப்பம்சமாகும்.

ஒரு முறை தேவரரையாழி இந்துக் கல்லூரியில் பாமாருக்குமணி என்ற நாடகத்தைப் பெண்பிள்ளைகளை வைத்து பயிற்றுவித்து அரங்கேற்றினார். இது ஒரு இசை நாடகமாக இருந்ததனால் நன்றாகப் பாடக்கூடிய பெண்பிள்ளைகளாகிய செலவாம்பிகை, திலகவதியார், இராஜேஸ்வரி, மனோகரி ஆகியோர் பங்குபற்றினர். இந்த நாடகம் வடபகுதியெங்கும் மேடையேற்றப்பட்டு பலரதும் பராட்டைப் பெற்றது.

1963ல் இவரது கலைச்சேவையினைப் பராட்டு முகமாக கரவை சைவநெறிக் கழகம் ஒரு பாராட்டு விழாவை வைத்து, கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் 'கலாவிநோதன்' என்னும் பட்டமும் வழங்கப்பட்டது.

கலையரசு சொர்ணலிங்கம் அண்ணாசாமி அவர்கள் பற்றிக் குறிப்பிடுகையியில் "1947ஆம் ஆண்டு தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற ஒரு கதம்பக் கச்சேரியில் நானும் மனோகரன் நாடகத்தில் ஓர் அங்கத்தில் தோன்றிப் பாடியபோது அங்கு வந்திருந்த இளைஞன் ஒருவன் பக்கவாத்தியமாக ஆர்மோனியம் வாசித்தான். அவரது இசைஞானமானது பலநாள் எனது பாட்டிற்கு ஒத்திகை பார்த்து வாசித்தது போல இருந்தது. பின்பு இறங்கி வந்து உனது பெயர் என்ன எனக் கேட்டேன், அவர் அண்ணாசாமி என்றார். உன்னைப்பற்றி என்னிடம், எனது நண்பன் கந்தவனம் கூறியுள்ளார் உனக் கூறினேன். பின்பு பல நாடகமேடைகளில் பார்த்த இவரை, இவரது ''கலாவிநோதன்'' பட்டமளிப்புக்குப் போயிருந்தபோது இவரது குணாதிசயங்கள் பற்றி நிறைய அறிந்துகொண்டேன்" எனக் குறிப்பிடுகின்றார் அண்ணாசாமி நினைவு மலரில்.

தோழர் தர்மகுலசிங்கத்தின்பால் வடமராட்சி மக்கள் பெரும் அன்பு கொண்டவர்களாக இருந்தனர். இதற்கு அவரது சமதர்மக் கொள்கையே காரணமாகவிருந்தது. தோழர் தர்மகுலசிங்கம் ஒரு சட்டவாதி, ஒரு கலாரசிகன், அண்ணாசாமி மாஸ்ரரிடம் மிகவும் நெருக்கமானவர். தர்மகுலசிங்கம் மறைந்தபோது மாஸ்ரர் அவர்கள் தானே பாட்டெழுதி அதற்கு மெட்டும் அமைத்து தானே பாடினார். அப்பாடல் "எங்கள் அருந்தலைவர் தர்மகுலசிங்கம் மறைந்தாரே – எங்கெங்கு தேடினும் அவர் போல் தங்கம் கிடைக்கதே'' என்றவாறாக தொடர்ந்து செல்லும் பாடலாகும். இப்பாடல் அந்த நாட்களில் வடமராட்சியின் பட்டி தொட்டியெங்கும் சகலரது வாய்களிலும் ஒலித்த பாடலாகும். இடதுசாரிக் கொள்கைவாதியான அண்ணாசாமி சமூகப் போராட்டங்களில் கலந்து தனது இசை மழையால் மக்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்தினார்.

தேவரையாழிச் சைவ வித்தியாசாலையில் கற்றுத் தேறிய மாஸ்ரர் அவர்கள் 1936ஆம் ஆண்டு ஆசிரிய பயிற்சிக்காக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார். அவர் அங்கு பயிற்சி பெறும்போது இந்திய பிரபல சங்கீத வித்வான் முசிரி சுப்பிரமணிய ஐயர் சங்கீதக் கச்சேரி செய்ய வந்திருந்தார். அப்போது வரவேற்புப் பாக்களை அண்ணாசாமி அவர்கள் இசையோடு பாடினார். இன்னிசைக் கச்சேரி முடிந்ததும் முசிரி அவர்கள் எழுந்து அதிபரையும் சபையோரையும் நோக்கி ''சிறந்த சங்கீத வித்துவானை இங்கு வைத்துக்கொண்டு ஏன் என்னை அழைத்தீர்கள்'' என்றதும் சபை நிறந்த கரகோசம் எழுந்தது. (அண்ணாசாமி நினைவு மலர்)

பயிற்சி முடிந்ததும் மருதானை கப்பித்தாவத்தை தொண்டர் வித்தியாலயத்தில் ஆசிரிய பணிக்கு நியமிக்கப்பட்டார். அப்போது மாணவர்களுக்கு படிப்பித்தலோடு மட்டுமல்லாது பாடல், நடனம், நாடகம் போன்றவற்றையும் பயிற்றுவித்து பாடசாலைகளிலும் போட்டிகளுக்கும் பிள்ளைகளைத் தயார் செய்து பரிசில்கள் பலவும் பெறவைத்தார். இலங்கையின் சினிமாவின் முதற் கதாநாயகியாகிய ஜெயகௌரியும், அவரது சகோதரியான ஜெயந்தியும் பல ரேடியோ, தொலைகாட்சி நேர்காணலில் அண்ணாசாமி என்ற அண்ணாவியார் தங்கள் முதல் கலைக்குரு என நினைவு கூர்ந்தனர். அதேபோன்று அங்கு படித்த பிரபல பாடகி கலாவதி சின்னச்சாமியும் மாஸ்டர் அவர்களே தனது கலைக்குரு என்பதனையும் நினைவுகூருவார். பின்பு காரை நகரில் படிப்பித்த காலங்களில் பல மாணவர்களை ஊக்குவித்து வழிகாட்டியுள்ளார்.

இவர் ஒரு கலைஞனாக இருந்தாலும் கற்பித்தலிலும் சிறந்து விளங்கினார். அவரிடம் கல்விகற்கும் வாய்ப்பு எனக்கும் தேவரையாழி இந்துக் கல்லூரியில் கிடைத்தது. அவர் புவியியல், சித்திரம் ஆகியவற்றில் தலைசிந்த ஆசிரியராகத் திகழ்ந்தார். பாடசாலையில் கலைவிழா, பரிசளிப்பு விழா என்று வரும்போது பாடசாலை முடிவுற்றதும் மாணவர்களுக்குப் பாட்டுப் பயிற்சி, நாடகப் பயிற்சி, இசைநாடகப் பயிற்சி, நடனப்பயிற்சியென்று வழங்கி மாணவர்களை பல்கலைகளிலும் புடம்போட்டார். இவர் பழக்கிய பல நாடகங்கள் வடமராட்சிலும் மற்றும் வடமாகாணரீதியிலும் பல முதற் பரிசில்களை வென்றுவந்தது குறிப்பிடத்தக்கது. தேவரையாழி இந்துக்கல்லூரியின் கலை வளர்ச்சியில் பெரும்பங்காற்றினார். இவரது கிராமிய நடனம் மிகவும் புகழ்வாய்ததாகும். இவரது நெறியாள்கையில் உருவாகிய நாடகங்களில் இராஜராஜசோழன், இராவணேசன், அருணகிரிநாதர், வீரசிவாஜி போன்றன சிலவாகும். சில நாடகங்கள் எஸ்.ஆழ்வாப்பிள்ளை (இளவரசு) ஆசிரியருடன் சோர்ந்தும் பயிற்றப்பட்டன. இதில் மிகப்பிரபலமாகியதும் பரிசிகள் பல பெற்றதும் டாக்டர் போஸ்ரஸ் என்ற ஆங்கில நாடகத் தழுவலாகும். மாணவிகள் மட்டும் நடித்த அம்பிகாபதி என்னும் நாடகமும் சாகுந்தலம் என்ற நாட்டிய நாடகமும் பிரபலம் வாய்ந்ததாகும். ஒரு தயாரிப்பிற்குத் தகுதிவாய்ந்தவர்களைத் தேர்வு செய்து அவர்களை ஈடுபடுத்துவது அவரது சிறப்பம்சமாகும். இவரது நாடக அரங்கப் பாசறையில் நடித்து வளர்ந்தவர்கள் கலைஞர் கோபி நேசன், மு.பாக்கியநாதன், இ.யோக-

ராஜன், ச.இரத்தினசேகரன், க.கமலாகரன், மா.மணிகலாதன், கீ.திருப்புகழ் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

கலைத்துறையில் சிறந்து விளங்கிய அண்ணாசாமி ஆசிரியர்பற்றி ஆசிரியர் ஜி.ஜி. மகாலிங்கம் அவர்கள் குறிப்பிடுகையில் ''ஒரு தினத்திலேயே பாடசாலையில் கடமையுணர்வுள்ள ஆசிரியனாகவும், மாலையில் ஒரு விளையாட்டு வீரனாகவும், இரவில் நாடக மேடையில் திறம்பட நடிக்கும் ஒரு நடிகனாகவும் செயற்பட்டார்'' என்று குறிப்பிடுகின்றார்.

உதைபந்தாட்டத்தில் சிறந்து விளங்கிய இவர் ஆங்கிலேயப் படையினருடன் நடைபெற்ற போட்டியின்போது சிறப்பாக ஆடி பலரது பாராட்டுக்களையும் பெற்றார். கரப்பந்தாட்டத்திலும் தனித்திறமை கொண்டவர். தனித்து நின்றே விளையாடும் தகுதி பெற்றவர். இவர் 'விக்ரறி' என்ற கரப்பந்தாட்டக் கழகத்தை உருவாக்கி அதனை முன்னணிக் கழகமாகத் திகழவைத்ததோடு மட்டுமல்ல அகில இலங்கை ரீதியிலும் முதலிடம் பெற்று வெற்றியுமீட்டினார். வதிரி டையமன் விளையாட்டுக் கழகம், வதிரி தமிழ் மன்றம் என்பவற்றின் தலைவராகப் பலகாலம் பணியாற்றி சமூக சேவையாளனாகவும், பிரச்சினைகள் வரும்போது அவைகளைச் சுமூகமாகத் தீர்க்கும் சமாதானச் செயல் வீரனாகவும் திகழ்ந்தார்.

ஆசானாய், நடிகனாய், பாடகனாய், ஓவியனாய், விளையாட்டு வீரனாய், நாடக ஒப்பனைக் கலைஞனாய், நாடக இயக்குனராய் தன்னகத்தே பல்லாற்றலைக் கொண்ட அண்ணாசாமியவர்கள் தனது ஆற்றல்களை பல மாணவர்களுக்கு உரித்தாக்கி இறைவனடி சேர்ந்தார். ஆனால் இவர் மறைந்தும் அவரது பல்லாற்றல்களினால் இன்றும் நினைவுகூரப்படுகின்றார். மற்றும் இலங்கையின் தமிழ் நாடகப் பாரம்பரியத்திற்கு அளப்பரிய சேவையாற்றிய ஒரு பெருமகன் என்ற முத்திரையையும் பதித்துச் சென்றுள்ளார்.



raveendran.s@thaiveedu.com

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■